**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராளே பிரதேச சபை - 2023**

--------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராளே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராளே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், அங்கீகாரமின்றி ரூபா 50,000,000 நிலையான வைப்பு மாற்றப்பட்டுள்ள போதும், அப் பெறுமதியை நிலையான வைப்பிற்கு செலவு வைக்காது மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத மாற்றலாக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிலையான வைப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான பிச்சமல்வத்த திண்மக் கழிவு முகாமைத்துவ நிலைய காணி மற்றும் கட்டிடம் ரூபா 5,033,004 பெறுமதி மற்றும் போவலவத்த பொது காணியின் ரூபா 100,000 பெறுமதி மூலதனமாக்கப்பட்டு இருக்காததுடன், தென்னேகும்புர பழைய நூலக கட்டிடத்தின் பெறுமதி ரூபா 538,083 தொகை கூடுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | காணி மற்றும் கட்டிடம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 57,023,351 ஆன போதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 55,356,684 | - மேற்படி - | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் வருமானம் ரூபா 1,666,667 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கழிவு பொருள் முகாமைத்துவத்திற்கு காணியொன்றை கொள்வனவு செய்வதற்கென குறிப்பிட்டு ரூபா 26,000,000 தொகை 05 ஆண்டு காலமாக கடன்கொடுனராக தவறுடன் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கடன்கொடுனரை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை

| | விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 05 சொத்து விடயங்கள் மற்றும் 02 பொறுப்பு விடயங்களிற்குரிய மீதிகள் அதற்குரிய அட்டவணைகள் மற்றும் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யும் போது, ரூபா 1,385,256 ஆன இணங்காமை அவதானிக்கப்பட்டது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | வித்தியாசத்திற்கான காணரத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய வீதவரி வருமானக் கணக்கு பிரகாரம் ரூபா 15,996,887 பெற வேண்டிய மீதி காணப்பட்ட போதும், கணனித் தொகுதி பென்பொருள் பிரகாரம் பெற வேண்டிய வீதவரி மீதி ரூபா 15,304,742 ஆனதில், ரூபா 692,145 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகாரசபை முதலீட்டுக் கணக்கு மீதி ரூபா 12,596,604 மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை வைப்புக் கணக்கு மீதி ரூபா 15,049,898 ஆனதில், கணக்கு மீதிகளிற்கிடையில் ரூபா 2,453,294 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசத்தை கண்டறிந்து அறிக்கை இடுவததென. | கணக்கு மீதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கூட்டுத் தொகை ரூபா 8,894,890 ஆன 02 சொத்து விடயங்களிற்குரிய பதிவேடு மற்றும் அட்டவணை சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், கணக்காய்வின் போது அவற்றை திருப்தி கரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான அட்டவணைகளை சரியாக பேணிக் கொள்ள வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (i) | 132 | விடய பொறுப்பு அமைச்சரின் ஆவண ரீதியான முன்கூட்டிய அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில், 08 நலன்பெறுனர்களிற்கு வீடமைப்பு உதவி வழங்க ரூபா 1,096,808 செலவிடப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் அங்கீகாரத்தை பெற்று செயற்படுவதென. | உதவி வழங்குவதாயின், முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும் |
| (ii) | 154(1) | காணி உபபிரிப்பு 02 இன் 60 காணித் துண்டுகள் விற்பனை பெறுமதியின் 01 சதவீத வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், தற்காலிக மதிப்பீட்டின் மீது வருமானம் பெற்றுக் கொண்ட காரணத்தால், விற்பனை பெறுமதியின் எஞ்சிய தொகை ரூபா 2,220,161 பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து குறித்த அறவீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம், நடவடிக்கை எடுத்து வருமானம் அறவிட வேண்டும். |
| **(ஆ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| (i) | 2020 ஒக்டோபர் 16 இன் 18/2020 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவை 01 ஆம் பகுதியின் XIV அதியாயத்தின் 4.1 மற்றும் 4.1.1 பிரிவுகள் | அரச அலுவலர்களிற்கு தமது சேவை தேவைப்பாட்டின் பிரகாரம், நடாத்தப்படும் அரச பொழி தேர்ச்சி பாடநெறிக்கு பங்குபற்றிய 16 பேர்களிற்கு பிரயாணப் படி மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 693,481 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதென. | தாபன விதிக்கோவை் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 2023 மே 08 இன் 07/2023 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான தேர்த்தலிற்கு வேட்பாளர்களாக பெயர் வழங்கியிருந்த அலுவலர் ஒருவர் மேற்படி சுற்றிக்கை பிரகாரம் இடமாற்றம் செய்யாது, பிரதேச | இந்த அலுவலர்களிற்கு ஒப்படைத்துள்ள கடமைப் பணி முடிவடைந்தவுடேன அலுவலக | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சபையினுள்ளேயே கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | கடமையிலிருந்து விடுவிப்பதென. | |

**(இ) ஏனைய சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2023 மார்ச் 24 இன் 3/4/10 பொது கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதம் 5.10 பிரிவு | பிரதேச சபையொன்றின் பெறுகைகள் குழுவிற்கு பிரதேச செயலகத்தின் கணக்காளரை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டிய போதும், பிரதேச சபையினால் மீளாய்வாண்டில், எடுத்திருந்த 11 பெறுகைகள் தீர்மானங்களிற்கு பெறுகைகள் செய்யப்பட்டிருந்த போதும், கணக்காளர் ஒருவரை தொடர்புபடுத்தி இருக்கவில்லை. | இதன் பின்னர் அனைத்து பெறுகைகள் தீர்மானங்களையும் கணக்காளர் ஒருவரை தொடர்புபடுத்திக் கொண்டு மேற்கொள்வதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 133,729,043 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 83,770,465 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஒக்டோபர் 28 இன் 2020/06 திகதிய மத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02.2(1) பந்தி பிரகாரம், செயற்படாது, குழு அங்கீகாரத்துடன் ரூபா 50,000,000 நிலையான வைப்பொன்று 2023 திசெம்பர் 21 திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் இவ்வாறான கைத்தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பில்லிட்ட வருமானம் | 2023 சேகரித்த வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பில்லிட்ட வருமானம் | 2022 சேகரித்த வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 27,205,760 | 27,565,562 | 29,246,636 | 16,072,019 | 27,214,820 | 26,089,341 | 26,922,888 | 17,753,093 |
| (ii) | வாடகை | 2,022,332 | 3,676,872 | 3,500,790 | 176,082 | 1,117,932 | 2,124,463 | 2,181,263 | -- |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 3,048,050 | 10,188,189 | 9,833,202 | 413,236 | 2,215,750 | 2,409,812 | 7,566,885 | 58,249 |
| (iv) | ஏனைய வருமானம் | 159,077,400 | 168,643,362 | 99,425,240 | 210,999,458 | 128,011,372 | 112,908,692 | 127,782,436 | 141,781,336 |
| | மொத்தம் | 191,350,542 | 210,073,985 | 142,005,868 | 227,660,795 | 158,559,874 | 143,532,308 | 164,453,472 | 159,592,678 |

### 2.3.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அனைத்து வருமான மூலங்களினதும் கடந்த ஆண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவிய நிலுவை ரூபா 159,592,678 ஆனதுடன், மீளாய்வாண்டில் அப் பெறுமதி ரூபா 227,660,795 ஆனதில் நிலுவை வருமானம் 43 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | குறித்த அறவீட்டை விரைவில் மேற்கொள்வதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) **வீதவரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை ரூபா 15,996,887 ஆன வீதவரி மீதியினுள் அலகொன்றில் நிலுவை ரூபா 5,000 இனை விஞ்சிய 793 ஆதனங்களில் இருந்து ரூபா 7,222,097 நிலுவையை 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை வீதவரியை சேகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்** | | |
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,626,233 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 198,023,051 ஆனது. பெறவேண்டிய முத்திரைக் கட்டண பெறுமதியில் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான பெறுமதி ரூபா 110,583,740 ஆனதுடன், 05 ஆண்டுகளை விஞ்ஞிய மீதி ரூபா 32,082,625 ஆனது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4. மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களிற்கு எதிராக என்னால் கடந்த ஆண்டினுள் ரூபா 262,608 மிகை அறவீடு விதித்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த அறவீட்டை மேற்கொள்வதென. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், மலசல கழிவு எடுத்துச் செல்லல் மற்றும் கழிவகற்றல் பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள மற்றும் மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்க சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்கும் அளவிற்கு சபைக்கு சொந்தமாக பொறுத்தமான காணி இல்லாததுடன், அதற்கு தேவையான தொழிநுட்பம் மற்றும் தொழிலாளர்கள் தேவையென. | பொது மக்கள் சுகாதாரத்தை பேணிச் செல்வதற்காக சட்டத்தின் கடமைகளை மேற்கொள்ள வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய 02 கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 20,407,814 ஆனதுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலாக காலத்தை விஞ்சியிருந்த மீதி ரூபா 3,692,872 மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 16,714,942 இனை அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய கடன்கொடுனர் மீதி 02 இன் கூட்டுத் தொகை ரூபா 147,630,635 ஆனதுடன், | எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய மீதியை தீர்க்க |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆண்டு 01 இற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலாக காலத்தை விஞ்சியிருந்த மீதி ரூபா 53,325,108 ஆன மீதி மற்றும் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 5,872,639 இனை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 நவம்பர் 28 திகதிய இலக்கம் 1891 கொண்ட வர்த்தமானியின் 12 – 788 பகுதியில் மொத்த சபை அதிகார பிரதேசத்தையும் முன்னேற்றமடைந்த பிரதேசமாக வெளியிட்டு அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதனங்களையும் மதிப்பிட்டு வீதவரி அறவிடும் நடவடிக்கை 2015 ஆண்டில் ஆரம்பிப்பதாக அறிவித்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 அளவில் 09 ஆண்டுகள் கடந்துள்ள போதும், ஆதனங்களை மதிப்பிடும் நடவடிக்கையை மேற்கொண்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்காத காரணத்தால் சபை நிதியத்திற்கு பாரிய வீதவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குறித்த மதிப்பீட்டை மேற்கொண்டு வழங்கிய உடனே குறித்த அறவீட்டை மேற்கொள்வதென. | காலரீதியாக ஆதன மதிப்பீட்டை மேற்கொண்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் ஹன்தான எஸ்டேட் வீடமைப்பு உத்தேச திட்டத்தின் ரெசிடன்சிங் வீடமைப்பு கருத்திட்டத்தில் 12 ஏக்கர் 03 ரூட் 8.1 பர்சஸ் ஆன மொத்த நிலத்தையும் 40 பகுதிகளாக உபபிரிப்பு செய்து ஏலத்தில் விற்கும் போது, அபிவிருத்திற்கு முன்னரான சந்தைப் பெறுமதியின் மீது 01 சதவீத வருமானமான ரூபா 3,072,000 பெற்றிருந்த போதும், இந்த காணித் துண்டுகளை விற்ற பின்னர் விற்பனை பெறுமதி மற்றும் மதிப்பீட்டு பெறுமானத்தின் மீது அறவிட்ட வரிக்கிடையில், வித்தியாசத்தை இனங்கண்டு அறவிட்டிருக்கவில்லை. | வித்தியாசத்தை இனங்கண்டு இணக்கப்பாட்டு சான்றிதழை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | 01 சதவீத வரி வருமானத்தை சரியாக கணக்கிட்டு அறவிட வேண்டும். |
| (இ) | ஹன்தான எஸ்டேட் வீடமைப்பு உத்தேச திட்டத்தின் பொதுக் காணிக்காக 01 ஏக்கர் 6.3 பர்சஸ் இனை விளையாட்டு அரங்குடன் கூடிய நிலத்தை சமூக மற்றும் களியாட்ட நடவடிக்கைகளிற்காக பிரதேச | சுட்டிக் காட்டியவாறு குறித்த காணித் துண்டை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | பொது வசதிகளிற்காக காணித் துண்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு வழங்க உத்தேசித்திருந்த போதும், இந்த மைதானம் தற்போது கூட உபபிரிப்பிற்கு முன்னரிலிருந்து கிராமவாசிகளால் பயன்படுத்தும் மைதானமொன்று என அவதானிக்கப்பட்டதால், இந்த உபபிரிப்பிற்கு பொது நடவடிக்கைகளிற்காக பெற்றுக் கொண்ட 10 சதவீத காணியை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | |

### 3.4 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு நிதியத்தினால் குறை வருமானமுடையவர்களிற்கு பகிர்ந்தளிக்க பெற்றுக் கொண்ட ரூபா 39,965 ஆன இழைய வளர்பபு இயந்திரம் ஒன்றை சபை ஊழியர் ஒருவருக்கு வழங்கியிருந்ததுடன், இரண்டு நலன்பெறுனர்களிற்கு வழங்கியிருந்த ரூபா 63,800 பெறுமதியான 02 ஓலொக் தையல் இயந்திரங்களை வழங்கிய நபர்களை கண்டறிய முடியாததால் முறைகேடொன்று இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | சுய தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களிற்கு பொது சபையின் அங்கீகாரத்துடன் உபகரணங்கள் வழங்கியுள்ளதென. | நலன்பெறுனர்களை சரியாக இனங்கண்டு உதவி வழங்க வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் காணி ஏலவிற்பனைகளிலிருந்து பொது செயற்பாடுகளிற்காக சுவீகரித்த பெறுமதி ரூபா 9,615,052 ஆன 07 காணித் துண்டுகள் மற்றும் பெறுமதி கணக்கிட முடியாத 04 காணித் துண்டுகள் விளைவற்று நிலவின. | குறித்த விடயம் தொடர்பாக கண்டறிந்து அறிக்கையிடுவதென. | காணிகளை நோக்கத்துடனான பணிகளிற்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 1,400,000 ஆன கொம்பெக்டர் டேலர், பெறுமதி மதிப்பிட முடியாத டேலர் ஒன்று மற்றும் ரூபா 648,716 பெறுமதியான நீர் உபகரணங்கள் இருப்பு 06 ஆண்டுகலாக விளைவற்று அல்லது குறை பயன்பாட்டுடன் நிலவின. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்வதென. | குறித்த செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமை** | | |
| (i) | சபை பயன்படுத்தும் அன்பளிப்பாக கிடைத்திருந்த ஒரு ஏக்கரிற்கும் அதிகமான அளவைக் கொண்டு தம்பவெல மயானம் அமைந்துள்ள காணியின் வேலி எல்லைகளை அமைத்து பாதுகாப்பை உறுதி செய்திருக்காததுடன், இந்த மயான காணியில் வெளி நபரொருவர் அனுமதியின்றி கைப்பற்றி வீடொன்றை நிர்மாணித்திருந்த போதும், அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்து பாதுகாப்பை உறுதி செய்வதென. | காணிகளின் உரிமையை சுவீகரிக்க வேண்டியதுடன், அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சபைக்கு சொந்தமான அச்சு இயந்திரமொன்று மற்றும் டெப் இயந்திரமொன்று சபை உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சபை கலைக்கப்பட்ட பின்னர் இந்த இயந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எழுத்து மூலம் அறிவித்து இந்த அச்சு இயந்திரம் மற்றும் டெப் இயந்திரத்தை ஒப்படைக்க தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதென. | இயந்திரத்தை மீண்டும் சபைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | பிரதேச சபைக்கு சொந்தமான ஹீரஸ்ஸகல எஸ்டேட் ரிச்மன்ட் ஹில் எனும் காணியின் பொது செயற்பாடுகளிற்கு வழங்கிய காணியிலிருந்து 1.8 ஆன காணியில் பெரடஸ் பார்க் எனும் ஹோடலின் உரிமையாளர் நீச்சல் தடாகமொன்றை நிர்மாணித்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த காணித் துண்டை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீண்டும் இக் காணியை அளவையிட தீர்மானிக்கப்பட்டதென. | காணியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்யப்படாமை** | | |
| | பிரதேச சபை கட்டிடத்தின் மின்தூக்கி 2015 ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்டிருந்ததுடன், 2023 மே 22 திகதி முதல் செயலற்று காணப்பட்டது. இதற்காக 2023 ஆண்டில், கூட்டுத் தொகை ரூபா 204,160 செலவிட்டு மின் தூக்கியை திருத்தியிருந்த போதும், 2024 பெப்ரவரி 21 கணக்காய்வு திகதிவரை அந்த இயந்திரம் செயலற்று காணப்பட்டது. | ஊடன்படிக்கை கட்டணம் மற்றும் பெட்டரிக்கான கொடுப்னவு மாத்திரம் செய்யப்பட்டுள்ளதுடன், புதிய சேவை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டு திருத்த வேலைகளை மேற்கொள்வதென. | மின்தூக்கியை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 05 வளவுகளில் பொருத்தியிருந்த CCTV கெமரா தொகுதி திருத்தத்திற்காக 03 வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரி குறைந்தபட்ச விலை சமர்ப்பித்த வழங்குனரிற்கு ரூபா 543,550 செலுத்தி திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மற்றைய இரண்டு வழங்குனர்களும் துறை தொடர்பாக பதிவு செய்த வழங்குனர்கள் இல்லையென அவதானிக்கப்பட்டது. | சபையிடம் சீசீரீவீ தொடர்பாக எந்த நிறுவனமும் பதிவு செய்திருக்காததால், கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனங்களிற்கிடையே அது தொடர்பாக விசாரித்ததென. | சட்டம், விதிகள் மற்றும் பெறுகைகள் வழிகாட்டின் பிரகாரம் நடவடிக்கைள எடுக்க வேண்டும். |

### 3.8 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்காக கட்டிடம் மற்றும் பாதை நியம விகிதங்கள் திருத்தப்பட்டுள்ள போதும், 2023 முதலாம் அரையாண்டு விகிதங்களின் மீது மதிப்பீடு தயாரித்து, பாதை, கால்வாய், மதகு மற்றும் பாலம் மற்றும் வேலிகள் நிர்மாண 28 கருத்திட்டங்களிற்கு ரூபா 2,500,881 தொகை கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை அந்த ஒப்பந்த சங்கத்திற்காக எதிர்காலத்தில் விடுவிக்கவுள்ள நிறுத்தற் பணத்திலிருந்து அறவிடுவதென. | பாதை நியம விலை வீதங்குளிற்கு (HSR) இணங்காது மதிப்பீடு தயாரித்த மற்றும் கொடுப்பனவு பரிந்துரைத்த அலுவலர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தம்பவெல பிரதான பாதையிலிருந்து சுடலைவரை பாதையை கொன்கிரீட் இடல் - ரூபா 2,000,000 | | |
| | பாதையை கொங்கிரீட் இட மதிப்பீடு தயாரித்திருந்த போதும், அங்கீகார மதிப்பீட்டிற்கு மாற்றமாக செயற்பட்டு தனியார் காணி உரிமையாளர் ஒருவரின் காணி எல்லையிற்கு 17.6 மீற்றர் நீளத்திற்கு பாதுகாப்பு மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வாறே, பாதையின் துவக்கத்தில் 200 மீற்றர் அளவிற்கு 12 அடி அகலத்திற்கும் 200 மீற்றரின் பின்னர் 24 அடி அளவிற்கு பாதையை விரிவுபடுத்தி அதற்காக மீண்டும் ரூபா 3,000,000 ஆன மதிப்பீடு தயாரித்து உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதற்காக ரூபா | ஆரம்ப கட்டத்தில் திட்டவட்டமாக மொத்த வேலைகளையும் இனங்காணுவது கடினமானதால் பள்ளத்துடன் கொங்கிரீட் பரப்புதல் போக்கு வரத்திற்கு கடினமாவதால், கூட்டிணைந்த கள பரீட்சிப்பின் மீது ஆரம்ப மதிப்பீட்டை திருத்தி பாதைக்கு கொங்கிரீட் பரப்புவதை போன்றே | முன்கூட்டியே தேவைப்பாட்டை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,918,052 தொகை செலுத்தப்பட்டுள்ளது. தேவைப்பாடின்றி பாதையை அங்கீகார அளவைவிட நிர்மாணித்து அதற்காக ரூபா 3,820,000 செலவிட்டுள்ளமை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | பாதையின் உடைத்து அகற்ற வேண்டிய கற்களை உடைத்தகற்ற பெற்றுக் கொண்ட முன்கூட்டிய அங்கீகாரத்தை சமர்ப்பிப்பதென. | |
| (இ) | குட் ஹோப் சந்தியிலிருந்து தலபியன்னாவ அம்பிலிபிடிய பாதை அபிவிருத்தி - ரூபா 11,150,000 | | |
| | பிரதேச சபை சட்டத்தின் 24 பிரிவின் பிரகாரம் பாதையொன்றை விரிவுபடுத்த அளவையிட்டு நிரந்த குறியீடிட வேண்டிய போதும், அந்த அறிவுறையை பின்பற்றாது பாதை நிர்மாணத்தை ஆரம்பித்திருந்ததுடன், 2023 மார்ச் 17 திகதி மற்றும் இலக்கம் S1/4/10 பொது கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம், மதிப்பீடொன்றை தயாரிக்காது அம்பிபிடிய கங்கஹவெல கிராம அபிவிருத்தி சங்கத்துடன் ரூபா 5,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பாதை பௌதீக பரீட்சிப்பின் போது, 03 மீற்றர் அகலமான பாதையை 06 மீற்றர் அளவாகுமாறு விரிவுபடுத்தி மதில் கட்டுவதற்கு திட்டமிட்டிருந்ததுடன், பாதையை விரிவுபடுத்தும் போது, ஒரு சில காணி உரிமையாளர்கள் காணி வழங்காத காரணத்தால் அந்த இடங்களில் விரிவாக்க முடியாதிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ள விடயத்தை ஏற்றுக் கொள்வதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக தவறுகள் குறைபாடுகள் இடம்பெறாதவாறு பொறுப்பேற்பதென. | தோழில் நிபுணத்துடன் மற்றும் ஒழுங்குறையான செயற்பாடுகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஒகஸ்டாவத்த சிடி மிஷன் சுற்றுவட்ட பாதையின் திருமதி பிரியந்தி அவரின் வீட்டிற்கு அன்டிய பாதை ரூபா 1,000,000 | | |
| (i) | பாாதையின் கொங்கிரீட் தட்டை 05 அங்குல அளவிற்கு இடவேண்டிய போதும், பாதையின் 02 இடங்களை உடைத்து பார்க்கும் போது தடிப்பு 2.75 மற்றும் 3.00 அளவாக காணப்பட்டது. அதன் பிரகாரம், உரிய நியமத்திற்கு பாதையை நிர்மாணித்திருக்காததால், பாதையினா் தடிப்பு குறைவடையும் காரணத்தால் கற்கள் களன்றிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொழிநுட்ப அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் இந்த பாதையை சீராக்குமாறு குறித்த ஒப்பந்த சங்கத்திற்கு அறவூட்டியுள்ளதென. | மதிப்பிடப்பட்ட நியமத்திற்கு பாதையை நிர்மாணிக்காதது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | இந்த பாதையின் கொங்கிரீட் தகைமை பரீட்சிப்பு 03 மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன், அந்த பரீட்சிப்புக்களின் | மீடுமொறு முறை பரீட்சிக்க பரிந்துரைக்க வேண்டியேற்பட்டதாக | மதிப்பிடப்பட்ட நியமத்திற்கு பாதையை |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம், பாதையின் தரம் பலவீனமாக காணப்பட்டது. | தொழிநுட்ப அலுவலரினால் அறிக்கையிட்பட்டுள்ளதென. | நிர்மாணிக்காதது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (iii) | இந்த பாதை 2023 பெப்ரவரி 27 திகதி உடன்படிக்கை செய்து 03 மாதங்களினுள் அதாவது, 2023 மே 27 திகதி பூர்த்தி செய்ய வேண்டிய போதும், அக் காலத்தினுள் கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை. 2023 இறுதி அரையாண்டினுள் பாதை நியம விலைகள் குறைவடைத்திருந்த போதும், 2023 ஜுலை 23 திகதி ஆரம்பித்து 2023 ஜுலை 29 வேலைகளை பூர்த்தி செய்து இந்த பாதைக்கு 1:2:4 மி.மி. 19 கொங்கிரீட் இடும்போது, பாதை நியம விகித இலக்கம் ST 047 பிரகாரம், ரூபா 27,427.48 விகிதத்தை பயன்படுத்த வேண்டிய போதும், ரூபா 31,667.71 ஆன விகிதத்தை பயன்படுத்திய காரணத்தால், 26.25 கன மீற்றரிற்கு ரூபா 4,240.23 வீதம் ரூபா 111,306 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை அறவிடுவதென. | பாாதை நியம விகிதம் பிரகாரம் உடன்படிக்கை செய்யாதது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.9 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாரான ஆளணியினருடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு இறுதி திகதியன்று 11 வெற்றிடங்கள் மற்றும் 20 மிகையும் காணப்பட்டன. | அனைத்து மிகை அலுவலர்களிற்கும் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளதென மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக குறித்த நிறுவனத்தை அறிவுறுத்தியுள்ளதென. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மெததும்பர் பிரதேச சபையில் கடமையாற்றிய II தரத்தின் சுகாதார தொழிலாளர் ஒருவர் எவ்வித நியாயமான காரணத்தையும் குறிப்பிடாது கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோராளே பிரதேச சபைக்கு இணைக்கப்பட்டிருந்தார். | இணைக்கப்பட்ட கால் எல்லை முடிவடைந்த பின்னர் மீண்டும் இணைப்பு கால எல்லையை நீடிக்க நடவடிக்கை எடுப்பதில்லையென. | குறித்த காரணத்தை குறிப்பிட்டு இணைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி இடமாற்றம், ஓய்வுபெறல் மற்றும் கடமையை விட்டுச் சென்ற 27 அலுவலர்களிடமிருந்து ரூபா 1,213,233 ஆன ஊழியர் கடனை அறவிட்டிருக்கவில்லை. | குறித்த அறவீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மத்திய மாகாண அரச சேவை அலுவலர்களிற்கான இடமாற்ற கொள்கை பிரகாரம், ஒரே கடமை நிலையத்தில் 05 ஆண்டுகளிற்கு அதிக சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதும், 05 ஆண்டுகளை விடவும் அதிக காலமாக பிரதேச சபையில் கடமையாற்றும் 03 அலுவலர்களிற்கு இடமாற்றம் கிடைத்துள்ள போதும், விடுவித்திருக்கவில்லை. | அலுவலர்களை இந்த கடமை நிலையத்திலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுப்பதென. | அலுவலர்களிற்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்க வேண்டும். |

## 3.10 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 வாகங்களின் மைலோ மாணி செயலற்று காணப்படுவதாகவும், அவற்றை திருத்தியிருக்காததால் எரிபொருள் பாவனை உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என கணக்காய்விற்கு உறுதியாகவில்லை. | 02 வாகனங்கள் திருத்த வெலைகளிற்கு முகவர் நிறுவனத்திற்கு அனுப்பியுள்ளதுடன், மற்றைய வாகனத்தில் மாணி இல்லையென முகவர் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதென. | மைலோ மாணியை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |